**செய்தி வெளியீடு எண்: 017** **நாள் : 13.01.2015**

## அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

**கடந்த காலங்களின் அறிவுக்கருவூலம், வலைதளத்தில் - உலகுடன் பகிர்ந்து கொள்ளுதல்**

தமிழ்நாடு அரசு சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கீழ் இயங்கி வரும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தின் ஓலைச்சுவடிகள் மற்றும் தாட்சுவடிகள் மின்-வெளியீடு (E-publication)தொடங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு மிகுந்த முனைப்புடன் ஓலைச்சுவடிகளையும் தாட்சுவடிகளையும் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பிடும்படியாக அவைகளை நுண்படமாக எடுத்து எண்ணிலக்கம் செய்து கணினிமயப்படுத்தி, பாதுகாத்து வைப்பதாகும். இச்சுவடிகள் நம்முடைய தொன்மையான அறிவுக்கருவூலம் ஆகும். தற்போதைய தகவல் தொழில் நுட்பக் காலத்தில் நாம் உள்ள நிலையில், இவற்றினை இணையத்தின் மூலம் உலகம் முழுவதும் பகிர்ந்து கொள்வது அவசியமாகும்.

ஆசிய அளவில் உள்ள சுவடிகள் நூலகங்களில் இந்நூலகம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இங்கு 72,748 அரிய சுவடிகளும், 25,373 ஆய்வு நூல்களும் நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சேகரித்து வைக்கப்பட்டுள்ளச் சுவடிகளில், காலின் மெக்கன்சி(1754-1821), டாக்டர் லெய்டன் மற்றும் திரு. சி.பி. பிரௌன் ஆகிய ஆய்வறிஞர்களின் சேகரிப்புகள் மிக அதிகமாகும். இவைகள் இந்நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

### மெக்கன்சியின் சேகரிப்பு

காலின் மெக்கன்சி 1783-ல் பொறியாளராக கிழக்கிந்தியக் கம்பெனியின் சென்னை பிரிவிற்கு வந்தார். இவர் பழமையான கணிதவியல் தொடர்பான நூல்களை சேகரித்தார், அதிலும் குறிப்பாக லோகரிதம், கீழ்த்திசை மொழிகள் ஆகியவற்றைச் சேகரிப்பதிலும், ஆய்வு செய்வதிலும் ஆர்வம் காட்டினார். இவர் சுவடிகள், நாணயங்கள், கல்வெட்டுக்கள், நிலப்படங்கள், இலக்கியம், மொழி, வரலாறு மற்றும் மக்களின் தொன்மைச்சடங்குகள் குறித்தவைகளை அதிக எண்ணிக்கையில் சேகரித்துள்ளார். இந்தியாவில் மட்டுமல்லாமல், இலங்கை, ஜாவா ஆகிய பகுதிகளிலிருந்தும் சேகரித்துளளார்ா். 1818-இல் திரு. மெக்கன்சி அவர்கள் இந்தியாவின் சர்வேயர் ஜெனரலாக நியமனம் செய்யப்பட்டவுடன் அவருடைய விலைமதிப்பற்ற சேகரிப்புக்களை கொல்கத்தாவிற்கு எடுத்துச் சென்றார். 1821-இல் அவர் இறக்கும் வரை அவருடைய பாதுகாப்பிலே இவை இருந்தன. 1821-இல் கிழக்கிந்தியக் கம்பெனியால் திருமதி மெக்கன்சி அவர்களிடமிருந்து 10,000 பவுண்டிற்கு வாங்கப்பட்டன. இவைகள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. ஒரு பகுதி லண்டனிற்கும், இதர பகுதிகள் கொல்கத்தா மற்றும் சென்னைக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

### லெய்டனின் சேகரிப்புக்கள்

லண்டனில் உள்ள "இந்திய அலுவலக நூலகத்தில்" உள்ள தமிழ், தெலுங்கு, கன்னட எழுத்துக்களிலுள்ள சுவடிகள் டாக்டர் லெய்டனுக்கு (சிறந்த மொழியியல் வல்லுநர் மற்றும் யாத்ரிகராக 1803 முதல் 1813 வரை இந்தியாவில் பணியாற்றியவர்) உரியவை என்று 1837-இல் திரு. சி.பி.பிரௌன் அவர்களால் கண்டறியப்பட்டது. டாக்டர் லெய்டனின் விலைமதிப்பற்ற சேகரிப்புக்களை கிழக்கிந்தியக் கம்பெனி அவருடைய இறப்பிற்குப் பின்னர்

பெற்று லண்டனில் வைத்திருந்தனர். பின்னர் அவை இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டன. இந்திய குடிமைப்பணியில் சேர்ந்த திரு. சி.பி.பிரௌன் அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது ஆகும். திரு. சி.பி.பிரௌன் (1798-1884) அவர்கள், அவருடைய விலைமதிப்பற்ற சமஸ்கிருத மற்றும் தெலுங்கு தாட்சுவடிகளை கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அன்பளிப்பாக வழங்கினார். இவைகள் 1855-ல் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டன.

இச்சுவடிகள் பெரும்பாலும் இலக்கியம், வரலாறு, தத்துவம் மற்றும் அறிவியல் சார்ந்ததாகும். இவைகள் சமஸ்கிருதம், தென்னிந்திய மற்றும் கீழ்த்திசை மொழிகளான தமிழ், தெலுங்கு, மராத்தி, உருது, பாரசீகம், சிங்கள மற்றும் பர்மிய மொழிகளைச் சார்ந்தவையாகும். மேலும் பல்வேறு காலங்களைச் சார்ந்த பல்வேறு பகுதிகளில் இருந்து கண்டெடுக்கப்பட்ட ஊர் வரலாற்றுச் சுவடிகள் (கைபீதுகள்), கல்வெட்டுகள் ஆகியனவாகும்.

அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகத்தின் ஓலைச்சுவடிகள் மற்றும் தாட்சுவடிகளை 600 dpi பிக்சல் அளவீட்டில் tiff இமேஜாக PDF முறையில் வெளியிடப்படுகிறது. இச்சுவடிகள் எண்ணிலக்கம் செய்யப்படும் முன் வேதியியல் முறையில் தூய்மைப்படுத்தப்படுகிறது. பின்பு வேதியியல் கலவைகள் (சிட்ரனெல்லா மற்றும் லெமன் கிராஸ் எண்ணெய்) பூசப்பட்டு நிழலில் உலர்த்தப்படுகிறது. இதனால் ஓலைச்சுவடிகள் வளைந்தும் உடையாமலும், நுண்கிருமிகளிடமிருந்தும் பாதுகாக்கப்படுகிறது. இந்நூலகத்தில் உள்ள தமிழ், தெலுங்கு, கன்னடம், உருது, பாரசீகம் முதலான ஓலைச்சுவடிகள் மற்றும் தாட்சுவடிகளின் 26 இலட்சம் பக்கங்களை மைக்ரோ பிலிம்மாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் இதுவரை 2400 சுவடிக்கட்டுகளின் 3 இலட்சம் பக்கங்கள் ஸ்கேன் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் சோதிட நூல்களில் 11 லக்கனங்கள், தமிழ் நூல்களில் பல்வேறு உரைகளுடன் கூடிய தொல்காப்பியம், நேமிநாதம், அகராதி, நிகண்டுகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

2015 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 13-ஆம் நாள் மிகவும் சிறப்பான நாளாகும். மின்னியல் தொழில்நுட்பம் ஒரு புதிய பரிமாணத்தை “பதிவுகள் காப்பு” புலத்தில் திறந்துள்ளது. இதன் மூலமாக உலகளாவிய வலைதள வசதியில் அகிலம் முழுவதும் பார்த்துப் பயனடையும் வகையில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தின் சுவடிகள் தொல்லியல் துறையின் இணைய தளத்தில் http://www.tnarch.gov.in மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் **திரு கே.சி. வீரமணி** அவர்களால் வெளியிடப்பட்டது. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ரா.கண்ணன், இஆப அவர்கள், தொழில்நுட்ப அரசு செயலாளர் திரு தா.கி. இராமச்சந்திரன், இஆப, அவர்கள், தொல்லியல் துறை ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன் இஆப, அவர்கள், இந்துசமய அறநிலையத் துறை ஆணையர் திரு ப. தனபால், அவர்கள் ஆகியோர் முன்னிலையில் வெளியிடப்பட்டது. இணைய தளத்தில் வெளியிடப்படும் இத்தகவல்கள் உலகில் உள்ள அனைத்து ஆய்வறிஞர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் மற்றும் இதர வாசகர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறோம். உங்களுடைய மதிப்புமிகு கருத்துரைகளை இந்த மின்அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்கிறேன். archcommissioner@gmail.com; tnarch@tn.nic.in.

இந்த இணையதளத்தினைப் பார்வையிடுவது நமது முன்னோர்களின் உன்னதமான வாழ்க்கை முறையினையும், கலாச்சாரத்தையும் அறிய பயன்படுவதோடு மட்டுமல்லாமல், இன்றைய சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு நலம்பயப்பதாகவும் அமையும்.

அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் மற்றும் ஆய்வு மையத்தின் நூலகத்தினை நேரடியாகப் பார்வையிட முடியாத பொதுமக்கள் உலகின் எந்தப் பகுதியிலும் இருந்து வலைதளத்தின் மூலமாக எளிதில் உரிய தகவலைப் பெற்றுப் பயனடையலாம்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**